**4154/PL1** **MAY 2011**

# LABOUR LAW

---

Time : Three hours Maximum : 100 marks

**Answer any SIX questions.**
**All questions carry equal marks.**

1. தொழில் துறை தகராறுகள் சட்டத்தின் கீழ் தொழில் துறை தகராறுகளை விசாரணை செய்யவும் தீர்வு காணவும் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகள் போதுமானதாக உள்ளனவா என்பதினை திறனாய்வு செய்க.

   **Critically examine the advocacy of the machinery created by the Industrial Disputes Act for the Investigation and settlement of Industrial Disputes.**

2. தொழில் சச்சரவுகளைச் சாட்டி அனுப்புதலுக்கான அரசின் அதிகாரத்தை விவாதிக்க.

   **Discuss the scope of the Government power for reference of Industrial dispute.**

3. 1948-ன் தொழிற்சாலை சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களை பணியில் அமர்த்தும் முறையைப் பற்றி விவரிக்க. அவர்களுடைய பணிகள் மற்றும் அதிகாரங்கள் யாவை?

   **Describe the procedure of appointment of inspectors under the Factories Act 1948. What are their duties and powers?**

4. "ஊதியம் வழங்கும் போது சட்ட விரோதமான பிடித்தங்களைச் செய்யாமல் தொழிலாளர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்"- இக்கருத்தை 1936ம் ஆண்டு ஊதியம் வழங்குதல் சட்டம் எவ்வாறு செயல்படுத்துகிறது என்பதை விளக்குக.

"The Payment of Wages Act, 1936 safeguards the employees from unauthorised deductions that may be made by the employee"– Explain how is this accomplished under the Act.

5. தொழிலாளர் அரசு காப்புறுதிச் சட்டத்தின் கீழ் எழும் கோரிக்கைகளையும் தகராறுகளையும் விசாரித்து தீர்வு வழங்கும் நீதிமன்றத்தின் அதிகார எல்லையை விளக்குக.

Explain the jurisdiction of the Employees State Insurance Court to hear and decide claims and disputes under the Employees State Insurance Act.

6. 1923-ம் ஆண்டு பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தில் ஒரு பணியாண்மையரின் இழப்பீடு வழங்க வேண்டிய பொறுப்பு நிலையினை விவாதிக்க.

Discuss the liability of an employee to pay compensation Under the Workmen's Compensation Act 1923.



7. பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு கிடைக்கும் சலுகைகள் யாவை?

What are the previleges enjoyed by the Registered Trade Unions?

8. பொது பயன்பாட்டு பணிகளில் சட்டப்பூர்வமான வேலை நிறுத்தம் இருக்க முடியுமா? வேலை நிறுத்தம் செய்த நாட்களுக்கு தொழிலாளர்கள் ஊதியம் கோரமுடியுமா?

Can there be a legal strike in a public utility service? Can workman claim Wages for Strike days?

9. கீழ்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்க்கு சிறு குறிப்பு வரைக.

(அ) தொழிலாளர் காப்பீட்டு சட்டத்தின் பலன்கள்

(ஆ) பேறுகால நலன்கள்

(இ) பாதுகாக்கப்பட்ட தொழிலாளி

(ஈ) வருங்கால வைப்பு நிதி.

Write short notes on any THREE of the following :

(a) ESI Benefits

(b) Maternity Benefits

(c) Protected Workman

(d) Provident Fund.